பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகம்
5 MAR 2020
திருச்சிராப்பள்ளி மாவட்டம்

## சுருக்கம்

பணியமைப்பு – பேரூராட்சிகள் நிர்வாகம் – செல்வி.பொ.பவித்ரா – கருணையடிப்படையில் இளநிலை உதவியாளராக 22.12.2017 முற்பகல் முதல் பணி நியமனம் செய்யப்பட்டது – பணி வரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

## நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ.1) துறை

**அரசாணை (3ப) எண்.06** **நாள்: 03.02.2020**

001862 **(திருவள்ளுவர் ஆண்டு 2051 விகாரி, தை–20)**

**படிக்கப்பட்டது:**

1. திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவரின் செயல்முறைகள் ந.க.எண். 2019/ 2017, பே2/, நாள்.16.12.2017.
2. பேரூராட்சிகளின் இயக்குநரின் கடிதம் ந.க.எண்.7648/2018/அ9 நாள்.05.07.2018.
3. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை, நாள் 01.08.2018.

*****

**ஆணை:-**

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவரின் செயல்முறைகளின்படி, திருச்சிராப்பள்ளி மாவட்டம், உப்பிலியபுரம் பேரூராட்சியில் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்தபோது 17.08.2017–ல் பணியிடைக் காலமான திருமதி.அ.செல்லம்மாள் என்பவரின் மகள் செல்வி.பொ.பவித்ரா என்பவருக்கு கருணையடிப்படையில் இளநிலை உதவியாளராக திருச்சிராப்பள்ளி மாவட்டம், தாத்தையங்கார்பேட்டை பேரூராட்சியில் பணி நியமனம் செய்யப்பட்டு, 22.12.2017 முற்பகல் முதல் பணியில் சேர்ந்துள்ளார்.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், தனியரின் பணியினை அவர் இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்த நாளான 22.12.2017 முற்பகல் முதல் வரன்முறைப்படுத்தி ஆணை வழங்குமாறு பேரூராட்சிகளின் இயக்குநர் அரசினைக் கோரியுள்ளார்.

3. மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்படும் பணியாளர்களின் பணியினை வரன்முறை செய்வதற்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இசைவினைப் பெறும் நடைமுறை கைவிடப்பட்டுள்ளது.

4. மேற்காணும் சூழலில், திருச்சிராப்பள்ளி மாவட்டம், உப்பிலியபுரம் பேரூராட்சியில் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்தபோது 17.08.2017–ல் பணியிடைக்காலமான திருமதி.அ.செல்லம்மாள் என்பவரின் குடும்பம் வறிய நிலையில் உள்ளதாக வட்டாட்சியர் வழங்கிய சான்றின் அடிப்படையிலும் மற்றும் இது தொடர்பான ஆவணங்களை பரிசீலனை செய்ததின் அடிப்படையிலும் காலஞ்சென்றவரின் வாரிசான செல்வி.பொ.பவித்ரா என்பவர் திருச்சிராப்பள்ளி மாவட்டம், தாத்தையங்கார்பேட்டை பேரூராட்சியில் கருணையடிப்படையில் இளநிலை உதவியாளராக தற்காலிகமாகப் பணி நியமனம் செய்யப்பட்ட நிலையில், அவரது பணியினை பணியில் சேர்ந்த நாளான

22.12.2017 முற்பகல் முதல் வரன்முறை செய்யக் கோரும் பேரூராட்சிகளின் இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலித்து, கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணி நியமனம் செய்யப்பட்ட செல்வி.பொ.பவித்ரா என்பவரது பணியினை 22.12.2017 முற்பகல் முதல் அப்பணியிடத்திற்குத் தேவையான உடற்தகுதியினை பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு பணிவரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி 4–ல் ஆணையிடப்பட்டுள்ளதன் அடிப்படையில், செல்வி.பொ.பவித்ரா என்பவர் நடைமுறையிலுள்ள விதிகளின்படி வருடாந்திர ஊதிய உயர்வு மற்றும் நிலுவைத் தொகை ஏதுமிருப்பின் அதனைப் பெற தகுதியுடையவராகிறார். இதுதொடர்பாக தனியரின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் செய்யுமாறு பேரூராட்சிகளின் இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. இவ்வரசாணை தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் அ.சா.எண்.20103/ட்டி.1/2019–1, நாள் 22.10.2019 மற்றும் பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத்துறையின் அ.சா.எண்.35492/ஜி2/2019–1, நாள் 23.12.2019–ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஹர்மந்தர் சிங்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

பெறுநர்
செல்வி.பொ.பவித்ரா, இளநிலை உதவியாளர்,
தாத்தையங்கார்பேட்டை பேரூராட்சி, திருச்சிராப்பள்ளி மாவட்டம்.
(பேரூராட்சிகளின் இயக்குநர் வழியாக).
பேரூராட்சிகளின் இயக்குநர்,
8வது தளம், நகர் நிர்வாக அலுவலக வளாகம்,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை–28.
பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், திருச்சிராப்பள்ளி மண்டலம்,
(பேரூராட்சிகளின் இயக்குநர் வழியாக)
மாவட்ட ஆட்சித் தலைவர் திருச்சிராப்பள்ளி,
(பேரூராட்சிகளின் இயக்குநர் வழியாக)

1 உண்மை நகல்

செயல் அலுவலர்
மலகிருஷ்ணம்பட்டி பேரூராட்சி,
துறையூர் Tk., திருச்சி Dt.

<u>நகல் :-</u>
அரசு கூடுதல் தலைமைச் செயலாளரின் முதுநிலை தனிச் செயலாளர்,
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை – 600 009.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அந.2) துறை, சென்னை – 600 009.
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (டி.1) துறை, சென்னை – 600 009.
பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் (ஜி.2)துறை, சென்னை – 600 009.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்

பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகம்
திருச்சிராப்பள்ளி மண்டலம்
மாவட்ட ஆட்சியரகம்
திருச்சிராப்பள்ளி - 620 001
நாள் : 5. 3. 2020

ந.க.எ : 524 /2020 /எப2

சார்வு செய்யப்படுகிறது.

பெறுநர்
செல்வி. பொ. பவித்ரா,
(நகல்) இளநிலை உதவியாளர், மாலகிருஷ்ணம்பட்டி பேரூராட்சி.

பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் (பொ)
திருச்சிராப்பள்ளி மண்டலம்
திருச்சிராப்பள்ளி.